அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1984 பெப்ரவரி மாதம் 22 ஆந் தேதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரச கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்.

சுயேச்சைப் படை திரட்டுதலில் பங்கெடுப்பு

1949 இல 17-ஐக் கொண்ட இராணுவச் செய்சட்டத்தின் 144-ஆம் பிரிவின் பிரித்தெடுத்த பகுதியொன்று இணைக்கப்பட்டுள்ளது. அதன் ஏற்பாடுகளுக்கு இணங்கி நடக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

~~1949 - 17ஆம் இலக்க இராணுவச் செய்சட்டத்தின்~~

144 - ஆம் பிரிவின் பிரித்தெடுத்த பகுதியின் மொழிபெயர்ப்பு

பணிக் கொள்வோரின் கடப்பாடு.

144. (1) தனது சேவையில் உள்ள எவரேனும் ஒருவருக்கு சுயேச்சைப் படையில் அல்லது சுயேச்சை ஒதுக்கப்படையில் அங்கத்தவராதற்கும், அந்தப் படையில் அல்லது ஒதுக்கப் படையில் அங்கத்தவராயுள்ள அத்தகைய ஒருவர் இந்தச் செய்சட்டத்தின் அதிகாரப் பிரகாரம் பெற்றுக் கொள்ளுதற்கு அல்லது நிறைவேற்றுதற்கு விதிக்கப்பட்ட இராணுவ பயிற்சியையும் இராணுவ சேவையையும் பெறுதற்கும் நிறைவேற்றுதற்கும் ஏற்றவகையில் உரிய வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தல் பணிகொள்வோர் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

(2) (அ) இந்தப் பிரிவின் (1)-ஆம் உப பிரிவில் சுட்டப்பட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தவறும், அல்லது

(ஆ) அந்த உப பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் பயிற்சியை அல்லது சேவையை பெற்றதற்காக அல்லது நிறைவேற்றியதற்காக ஒரு பணியாளரை சேவையிலிருந்து நீக்கும், அல்லது அவரது சம்பளத்தைக் குறைக்கும் அல்லது வேறு ஏதேனும் ஒரு மார்க்கத்தில் அவரைத் தண்டிக்கும்

பணிக்கொள்பவரொருவர் குற்றமிழைத்த குற்றவாளியாவர். ஒரு நீதவான் முன்னிலையில் நடைபெறும் சுருக்க விளக்கமொன்றின் பின்னர் குற்றவாளியாகப்பட்டதன் பேரில் நூறு ரூபாய்க்கு மேற்படாத தண்டப் பணம் செலுத்துதற்கு அல்லது மாதத்துக்கு அதிகப்படாத கால எல்லையில் சாதாரண சிறைவாசம் அல்லது கடூழியச் சிறைவாசம் அல்லது தண்டப்பணமும் சிறைவாசமும் ஆகிய இரண்டிலுக்கும் உட்படுவார்.